Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 33/2026** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **கணபதி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**01.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் சூரம்பட்டியில் குடியிருந்து, ஓட்டுனராக பணிசெய்து வருகிறேன். அ.சா.3 பாண்டிதுரை எனது அண்ணன் ஆவார். கடந்த 03.08.2024ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நானும், எனது அண்ணன் பாண்டிதுரையும் காந்திநகர் பாலத்திற்கு கீழே இணைப்புச்சாலையில் இருச்சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, எங்களுக்கு பின்னால் இருந்து புல்லட் இருச்சக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் எங்களை முந்திச் சென்றார். நாங்கள் சென்ற திசைக்கு எதிரே பொலிரோ பிக்கப் நான்கு சக்கர வாகனம் வந்தது. அதில் நேராக சென்று இடித்து, மேற்படி புல்லட் வாகனம் திரும்பி நாங்கள் வந்த இருச்சக்கர வாகனத்தில் மோதியது, நானும், எனது அண்ணனும் கீழே விழுந்துவிட்டோம். மேற்படி புல்லட் வாகனத்தில் வந்த நபர் வேகமாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது. எதிர் திசையில் பொலிரோ வாகனத்தில் வந்த நபர் மிதமான வேகத்தில் தான் வந்தார். ஆஜர் எதிரி தான் விபத்து நடந்த அன்று பொலிரோ வாகனத்தை ஓட்டினாரா என்று தற்போது எனக்கு தெரியவில்லை. புல்லட் வாகனத்தை ஓட்டி நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள், அவர்களிடமும் நான் மேற்படி விவரத்தை தான் கூறினேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதிபிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு**

**விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதிபிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்த சமயத்தில் எதிரி அவருடைய பொலிரோ வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக போலீசார் விசாரணையின் போது கூறிவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 33/2026** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **பாண்டிதுரை** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
01.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் சூரம்பட்டியில் குடியிருந்து, மதுரையில் கொரியர் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 03.08.2024 ம் தேதிகாலை சுமார் 11.30 மணியளவில் நான் கல்குறிச்சி–தூத்துக்குடி சாலையில், காந்திநகர் பாலத்திற்கு கீழே இணைப்புச்சாலையில் நானும், எனது தம்பியும் எங்களுடைய இருச்சக்கர வாகனத்தில், வடக்கிலிருந்து தெற்காக சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு பின்னால் இருந்து புல்லட் இருச்சக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் எங்களை முந்திச் சென்றார். நாங்கள் சென்ற திசைக்கு எதிரே பொலிரோ பிக்கப் நான்கு சக்கர வாகனம் வந்தது. அதில் நேராக சென்று இடித்து, மேற்படி புல்லட் வாகனம் திரும்பி எங்கள்மீது இடித்து நானும், எனது தம்பியும் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு கீழே விழுந்ததில் இடதுபக்க கால் தொடை பகுதியில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. மேற்படி புல்லட் வாகனத்தில் வந்த நபர் வேகமாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது. எதிர் திசையில் பொலிரோ வாகனத்தில் வந்த நபர் மிதமான வேகத்தில் தான் வந்தார். ஆஜர் எதிரி தான் விபத்து நடந்த அன்று பொலிரோ வாகனத்தை ஓட்டினாரா என்று தற்போது எனக்கு தெரியவில்லை. புல்லட் வாகனத்தை ஓட்டி நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள், அவர்களிடமும் நான் மேற்படி விவரத்தை தான் கூறினேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதிபிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதிபிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்த சமயத்தில் எதிரி அவருடைய பொலிரோ வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக போலீசார் விசாரணையின் போது கூறிவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 33/2026** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **ரமேஷ்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
01.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் புலியூரானில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன குபேரன் எனது ஊர்காரரர் ஆவார். கடந்த 03.08.2024 ம் தேதி காலை சுமார் 11.00 முதல் 11.30 மணியளவில் காந்திநகரில் இருந்து, வடக்கிலிருந்து தெற்காக குபேரன் அவருடைய இருச்சக்கர வாகனத்தில் வந்த போது எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த பொலிரோ பிக்அப் நான்கு சக்கர வாகனமானது, குபேரனின் இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தை நான் 100 மீட்டர் தொலைவில் இருந்த பார்த்தேன். ஆஜர் எதிரிதான் மேற்படி பொலிரோ வாகனத்தை விபத்து ஏற்படுத்திய அன்று ஓட்டினார். நான் அருகில் சென்று பார்த்த போது குபேரனுக்கு முகத்தில் பலத்த காயம் இருந்தது. அவர் சுயநினைவுடன் இல்லை. உடனே ஆம்புலன்ஸ் மூலமாக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் ஆம்புலன்ஸின் பின்னால் சென்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்த சாலையானது இரண்டு வாகனங்கள் செல்லும் இணைப்பு சாலை என்றால் சரிதான். மேற்படி இணைப்பு சாலைக்கு மேற்கு புறம் நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி இணைப்பு

சாலைக்கும் தேசிய நெடுஞ்சாலையும் இணையும் இடத்தில், நடுவே இரும்புவேலி தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த இடத்தில் இருந்து விபத்தை பார்த்தேன் என்றால் உதயம் பர்னிச்சர் கடைக்கு தெற்கில் நின்று பார்த்தேன். நான் நின்ற இடத்தில் இருந்து பார்த்த போது ஏதோ விபத்து ஏற்பட்டது என்று மட்டும் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்திற்கு அருகே சென்று பார்த்த போது குபேரன் இணைப்பு சாலையின் கிழக்கு பக்கம் விழுந்து கிடந்தார் என்றால் சரிதான். குபேரனின் இருச்சக்கர வாகனமானது எவ்வளவு தொலைவில் கிடந்தது என்றால் குபேரன் விழுந்த இடத்தில் இருந்த சுமார் 20 அடி துாரத்தில் இருந்தது. வழக்கில் கூறப்பட்டுள்ள வழக்கு சம்பவமானது குபேரன் கைபேசியை பயன்படுத்திக் கொண்டு வாகனத்தில் வேகமாக சென்றதால் நடந்தது என்றாலும், அதற்கு எதிரி காரணம் என்றாலும், நான் புகார் தாரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் துாரத்தில் இருந்துதான் பார்த்தேன்.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 33/2026** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **வீரபத்திரன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
01.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் புலியூரானில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன குபேரன் எனது மகன் ஆவார். கடந்த 03.08.2024 ம் தேதி எங்களது வீட்டில் இருந்து சுமார் காலை 11.00 மணியளவில் எனது மகன் குபேரன் அவனுடைய இருச்சக்கர வாகனத்தில் கிளம்பி அருப்புக்கோட்டைக்கு செல்வதாக கூறினார். அன்று காலை சுமார் 11.10 மணியளவில் ரமேஷ் என்ற ஒருவர் எனக்கு போன் செய்து எனது மகன் சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது ஒரு ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கூறினார். நான் உடனே கிளம்பி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்க்கும் போதே எனது மகன் இறந்துவிட்டார். முகம் முழுவதும் காயமாக இருந்தது. மருத்துவமனையில் என்னை புகார் கொடுக்கச் சொன்னார்கள். புகாரில் உள்ள விவரங்களை எனக்கு தகவல் கூறிய ரமேஷ் என்பவர் கூறினார். புகாரை காவல் நிலையத்தில் எழுதினார்கள். புகாரை படித்து காண்பித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. ப.சா.2 ரமேஷ் எனக்கு சொந்தமா என்றால் இல்லை எனது ஊர்காரர். ப.சா.5 மோகன் தாஸ், ப.சா.6 மணியன் ஆகியோர்கள் எனது அண்ணனின் மகன்கள் என்றால் சரிதான். புலியூரானில் இருந்து அருப்புக்கோட்டை எவ்வளவு துாரம் என்றால் 9 கி.மீ.ஆகும். ரமேஷ் என்னிடம் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால சரியல்ல. எனது மகன் தான் கைபேசியை பயன்படுத்திக் கொண்டே அதிவேகமாக வந்து, எதிரியின் வாகனத்தை கவனிக்காமல் மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும், விபத்திற்கு எதிரியின் கவனக்குறைவு காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் கூறியுள்ளவாறு விபத்து சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.